தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 கார்த்திகை 28 ஸபர் 4 இதழ் 304
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13 - 12 - 80

RECEIVED 1980-12-15 PERIODICALS DIVISION LIBRARY

## மக்கள் கடை திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ். பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் 'மக்கள் கடை'யை யாழ் நகரில் மேயர் திரு. இராசா விசுவநாதன் இன்று மாலை திறந்துவைக்கிறார்.

யாழ் பஸ் நிலையத்திற்கு அண்மையில் மின்சார நிலைய வீதியில் இக்கடை திறக்கப்படுகிறது. (இ)

# பாராளுமன்ற வளவில் வைத்து கடுவல எம்.பி.க்கு பயமுறுத்து

## கூட்டுத்தாபனத் தலைவர் பிணையில் செல்ல அனுமதி

### அமிரின் ஒழுங்குப் பிரச்னைமீது சபை நடவடிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் உரையாற்றிவிட்டு வெளியேறிய கடுவல எம். பி. திரு. எம் டி எச் ஜெயவர்த்தனவை உருக்குக் கூட்டுத்தாபனத் தலைவர் பயமுறுத்தியதாக சபாநாயகருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரிவிக்கப்பட்ட புகாரை அடுத்து கூட்டுத்தாபனத் தலைவர் பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டு சொந்தப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

உருக்குக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. பி. ஏ. சில்வாவுக்கு தம்மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கமளிக்க எதிர்வரும் திங்கட்கிழமைவரை அவகாசம் வழங்கிய பாராளுமன்றம், அவரது கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டபின்னரே அவரை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தது.

நேற்றுப் பாராளுமன்றம் பகல் போசன இடைவேளையின் போது தாம் வெளியேறிய சமயம் உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு.சில்வா தம்மைப் பயமுறுத்தியதாக திரு. ஜெயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கும், சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்காருக்கும் புகார்செய்திருந்தார்.

இதையடுத்து சபை மீண்டும் கூடியபோது திரு. அமிர்தலிங்கம் சபையில் கிளப்பிய ஒழுங்குப்பிரச்னையை அடுத்தே திரு. சில்வா மாலை 4-30 மணிக்குச் சபைக்கு அழைக்கப்பட்டு விசாரணையின்பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ம-இ)

## "உருக்குக் கூட்டுத்தாபன தலைவர் உயிரற்றவர்"

(கொழும்பு)

உயிரற்ற ஒருவர் உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருக்கிறார் என்று கடுவல எம். பி. திரு எம் டி.எச். ஜெயவர்த்தன கூறினார்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலைவிவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். திரு ஜெயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"உருக்குக் கூட்டுத்தாபனத்துக்கு 99 பேரை நான் சிபார்சு செய்தேன். அவர்கள் தற்காலிக ஊழியர்களாக வேலைசெய்கிறார். அவர்கள் நிரந்தரமாகக்கப்படாமலிருக்க வேலைவங்கி மூலம் புதியவர்கள் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது இதுதொடர்பாக நான் திட்டமிடல் அமைச்சின் செயலாளரிடம் விசாரித்தபோது அவர் கூட்டுத்தாப

(3-ம் பக்கம் பார்க்க)

## ஜனவரியில் 65 தமிழர் ஆசிரியர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அடுத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 65 தமிழ் ஆசிரியர்களும் 41 முஸ்லிம் ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர்.

மாவட்டங்களுக்கிடையிலான இந்தஆசிரியர் இடமாற்றத்தின் முதலாவது பட்டியலை கல்விச்சேவைக்குழுசகலகல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பியுள்ளது.

இதேவேளையில் அடுத்த ஜனவரி நடுப்பகுதியிலும் பெப்ரவரியிலும் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று விரைவில் வெளியிடப்படும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த.மகாசிவம் தெரிவித்தார். (இ)

## எம். டி. எச்.சின் புகார் மீது 'அமிரி'ன் ஒழுங்குப் பிரச்னை

### அரச தரப்பு உறுப்பினர் கரகோஷம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் கூடியதும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்; தான் ஒழுங்குப் பிரச்னை ஒன்றைக் கிளப்பப்போவதாகவும் எனவே குழு நிலையிலுள்ள சபையை பாராளுமன்றச் சபையாக மாற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

திரு. அமிர்தலிங்கத்தின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு குழு நிலையிலிருந்த சபை பாராளுமன்ற சபையாகக் கூடியது.

உரிமை மீறல் பிரச்னையொன்றை சமர்ப்பித்த திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் "இன்று காலை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கடுவல எம் பி. திரு. எம். டி எச். ஜெயவர்த்தன பேசிய பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. கடுவல உறுப்பினர் சபையை விட்டு வெளியே வந்தபோது உத்தியோகத்தர் கூட்டிலிருந்து வெளியே வந்த உருக்குக் கூட்டுத்தாபனத் தலைவர் பி. ஏ சில்வா உறுப்பினரைப் பயமுறுத்தியதுடன் அவரைத் தாக்கவும் முற்பட்டிருக்கிறார். இது ஒரு பாரதூரமான விடயம்.

"பாராளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் இது ஒரு பெரிய குற்றமாகும். பாராளுமன்ற அதிகாரம் 27 மனு 28 பிரிவின் கீழ் அவர் குற்றத்தைப் புரிந்துள்ளதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இவ் விவகாரம்குறித்து திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன தம்மிடம் கூறியிருப்பதாகத் தெரிவித்த சபாநாயகர் சபை முதல்வரை இதுதொடர்பாக பிரேரிக்க அழைத்தார். இதனைத்தொடர்ந்து முதல்வர் சார்பில் பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

உங்கள் பணத்திற்கு...
25% வட்டி...

சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்
25% 2 வருட வைப்புப் பணத்திற்கான கால முதிர்வு வட்டி...
23% 2 வருட வைப்புப் பணத்திற்கான மாதாந்த வட்டி...
21% 1 வருட வைப்புப் பணத்திற்கான மாதாந்த வட்டி...
மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதி நிறுவனம்
122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8267

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

15" அண்டர்லூட் ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு இ. ஏபிரகாம், 'ராணி கொட்' இருபாலை, கோப்பாய். 7601

யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்து மகளிர்கல்லூரி ஒழுங்கையிலிருந்து பலாலி றோட்டுக்கு 10 யார் தூரத்தில் அமைந்துள்ள 'கருலம்புலம்' என்னும் காணியின் விஸ்தீரணம் நில. பர. 2 குளி 14 1/2. த. சண்முகராசா சட்டத்தரணி மூலம் (கோண்டாவில்) தொடர்புகொள்ளவும். 7604

## சோதிடம்

குறிப்பு பார்க்க ரூ.10/-குறிப்பு அனுப்புக. வி.பி.பி. ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படும். KL. M. Krishnapillaiy, Sri Parasakthi Jothida Nilayam, Kankesanturai. 7591

## FOR SALE

Sony - Stereo Cassette. National - 2 in-one. Olympus Camera Orio with Flash & Film rolls Kodak Instamatic Camera with Film rolls. Seiko (Gents), Casio (Ladies). Digital Wrist watches Electric Skillet - Multi Cooker, Electric Baking Pan. Contact 74, Hindu College Lane, Jaffna. 7568

## தேவை

அப்பளம் தயாரிப்பதில் திறமையும் அனுபவமும் தெரிந்தவர்கள் தேவை (ஆண்களும், பெண்களும்). நேரில் தொடர்பு கொள்ளவும். A. T. விஜயநாதன் (சந்திரன்), நம்பியா தொழிற்சாலை, இணுவில் மேற்கு. 7599

## வலிகாமம் கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 4000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. 1980-12-20-ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை 1980-12-18-ந் திகதி வரை மேற்படி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஒன்று ரூபா 1/-ம், வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் மேற்படி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், வலிகிழக்கு (தெ. ப.) ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக்கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
நீர்வேலி,
1980-12-10. (7605)

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
28-ந் திகதி சனிக்கிழமை
13-12-80

மேடம்: தொழில் புரியும் இடத்தில் கண்டுபிடிப்புவேலை நடைபெறும். நண்பர்களை சூழ்ச்சிவலை விரிப்பார்கள்.

இடபம்: மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவர்வீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். தாய்வழிச் சுகமும் உண்டு.

மிதுனம்: கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகழ் பரவும். வாழ்க்கையில் வசதிநிலவும். புத்திரவழியால் புகழும்வந்துசேரும்.

கடகம்: உறவாடிக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தப்பட்டநோயும் ஏற்படலாம்.

சிங்கம்: பிரிந்தவர்கள் மீண்டும்வாழ்க்கையில் இணைவர். காதலர்க்கு கற்கண்டான தினம். களஸ்திரவழியால் பொருள்வரவிற்கும் இடமுண்டு.

கன்னி: தொழில் புரியும் இடத்தில் குறைகேட்க நேரிடும். பிறரைநம்பாதிருத்தல் நன்று. எதிர்பாராதபிரயாணம் இன்றுதடைப்படலாம்.

துலாம்: பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார். தந்தைவழியால் தனலாபமும் உண்டு. பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் காணப்படும்.

விருச்சிகம்: வாழ்வுப்பாதையில்வளமான திருப்பம் ஏற்படும். தொழில்துறையில் மேலதிகாரிகளின் பாராட்டையும் பெறுவீர்கள். பொன்னான நாள்.

தனுசு: பொருள்ஈட்டுவதில் புதியமுறைகளைக் கையாளுவீர்கள். மக்களால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு. உத்தியோக உயர்வும்கிடைக்கும்.

மகரம்: அதிக சிரத்தை சிறியதலையிடியைக் கொடுக்கும். உடல்நலனும் பாதிக்கப்படலாம். பணம் பலவழிகளாலும் செலவாகும். கட்டுப்பாடு தேவை.

கும்பம்: அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள். சிலரின்குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக்கிளறிவிடும். அமைதி நன்று.

மீனம்: இன்சொல்லின் மூலம் எதையும் சாதிப்பீர்கள். பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம். குடும்பத்திலும் மகிழ்ச்சிநிலவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பகிரங்க ஏல விற்பனை

வலி கிழக்கு வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலியில் 18-12-1980-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு சங்கத் தலைமைக்காரியாலயத்தில் வைத்து பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். கூடிய கேள்விக்காரர் பணம் முழுவதும் உடன் செலுத்தி பொருட்களை அகற்றவேண்டும். பொருட்களை சங்கக் காரியாலய நேரங்களில் தலைமைக்காரியாலயத்தில் பார்வையிடலாம்.

1. பழைய டயர்கள்

| | |
|---|---|
| 825 | 6 |
| 750 | 3 |
| 825 | 5 |
| | 14 |

2. வெற்றுரம் — 50 தனி

பொது முகாமையாளர்,
வலி கிழக்கு
வ. ப. ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி. 7576

## நாவற்குடன் பகுதி பல நோக்கு கூட்டுறவு சங்கம்

## ஏலவிற்பனை

நாவற்குடன் பகுதி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பின்வரும் பொருட்களுக்கான ஏலவிற்பனை 15-12-1980ந் திகதி காலை 10-00 மணிக்கு முருங்கன் நெல்பகுதி மண்டபத்தின் முன்பாக நடைபெறும் முருங்கன் புகையிரத நிலையத்திற்கு முன்பாக.

இவ் ஏல விற்பனையில் கூடுதலான சேள்விக்காரர் முழுப் பணத்தையும் ரொக்கமாக உடனே செலுத்தி பொருட்களை சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்தவேண்டும்.

இவ் ஏல விற்பனைக்கு சங்க ஏல விற்பனைக்குழு பொறுப்பாக இருக்கும். ஏல விற்பனை சம்பந்தமாக இயக்குநர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

ஏல விற்பனைக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பொருட்களை சங்க அலுவல் நேரத்தில் நேரடியாக பார்வையிட்டுக்கொள்ளலாம்.

ஏல விற்பனைப் பொருட்கள்:

புடவை வகைகள்: (சாறிகள், சீத்தை, பப்ளின், பிளவ்ஸ், சேட்டிங், சூட்டிங், சாறம், துவாய், பெற்சீற், வேட்டி போன்றபிடவைவகைகள் தளபாடங்கள் (பழுது), பைசிக்கிள்பெடல், ரோசிலெட், பவுடர், பென்சில், நூல் கட்டைகள், அப்பியா, தேயிலை, மாமைத், தம்புத்தடி, ஈக்கில் தடி, தையல் ஊசி, கதவு அங்கல் வகைகள், கதவுப்பூட்டுக்கள், உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் போன்ற இன்னோரன்ன பொருட்கள், மற்றும் கைத்தறிகள், அரிதட்டுகள், வெற்றுப்பெரல், தகரம் போன்றவை.

இங்ஙனம்

பொதுமுகாமையாளர்
நாவற்குடன் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
முருங்கன்.
1980-12-02.
7610

## இந்திய விஜயம் குறித்து திருப்தி

மாஸ்கோ, டிச. 12

இந்திய விற்கு தாம் மேற்கொண்ட நான்கு நாள் விஜயம் திருப்திகரமாக அமைந்ததாக சோவியத் ஜனாதிபதி திரு. லியோனிஸ் பிரஷ்னேவ் தெரிவித்ததாக சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு குரோமிக்கோ அறிவித்துள்ளார்.

## இந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

(மாவிட்டபுரம்)

மதுஒழிப்பாவுக்கு சிரமதானத்திற்கு சென்ற இளைஞர்களுக்கு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட வேலைப்பிரிவில்வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அவர்கள் பற்றிய விபரம் சேகரிக்கப்பட்டுவருகிறது.

வடபகுதியிலிருந்து மதுஒழிப்பாவுக்கு சிரமதானம் செய்யச் சென்ற ஒருபகுதி இளைஞர்களுக்கு ஏற்கனவே மேற்படி 3ம் கட்ட வேலைப்பிரிவில் வேலை வழங்கப்பட்டிருந்தது. மிகுதியாக உள்ள இளைஞர்களுக்கும் இங்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வடபிரதேச ஐக்கிய தேசியக்கட்சி இயக்குனர்கள் நடவடிக்கை எடுத்து அவர்களது விபரங்களைத் திரட்டிவருகிறார்கள்.

## தொலைபேசி சீர்கேடு

(வேலணை)

வேலணையில் அமைக்கப்பட்டுள்ள தன்னியக்கத்தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் அடிக்கடி பழுதாகி வருவதால் இங்கிருந்து முக்கியமானஇடங்களுடன் தொடர்பு கொள்வது சிரமமாகவுள்ளது.

குறிப்பாக உதவி அரசாங்க அதிபர் பெருந்தெருக்கள் அலுவலகம் அரசினர் வைத்தியசாலை, மின்சார சபை, கிராம சபை, பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், தபால்நிலையம், பாடசாலைகள் உட்படப்பல நிறுவனங்கள் இருந்தும் உரியநேரங்களில் வேறு இடங்களுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளமுடியாத நிலையிலுள்ளது.

## நடப்புவருட நிர்வாகிகள்

(வவுணதீவு)

கிரான்குளம் இந்து இளைஞர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆலோசகர் திரு.வீ. மாபத்மநாதன், தலைவர் திரு. க. சுப்பிரமணியம், செயலாளர் திரு. கு சிவசிதம்பரம், உப தலைவர் திரு. ஐ.பத்மநாதன், உப செயலாளர் திரு. பூ. சிவராசா, தனதிகாரி திரு. மு அருணகிரி, உபதனதிகாரி திரு கா. கமலநாதன்.

ஏழு பேர் கொண்டதோர் ஆலோசனைக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## விசேஷ விற்பனை

எம்மிடம் 15½ அடி தொடங்கி 23 அடி வரை பாவித்த கல்நார் இழை வள்ளங்கள் விற்பனைக்கு உண்டு

வாங்க விரும்புவோர் எமது கணக்காளரிடம் ரூபா 2/- செலுத்தி விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து அரக்கு முத்திரையிட்டு 20-12-80 சனிக்கிழமை 1 மணிக்கு முதல் அனுப்பி வைக்கவும்.

அனுப்பும்பொழுது காகித மேலுறையில் என்ன பொருட்கள் கோரப்படுகின்றன எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
சிறோர் அபிவிருத்தித் திட்டம்,
காரைநகர். (7596)


# அசொட்ரின்

நெல், மிளகாய், வெங்காயம் மரக்கறி, பருத்தி, புகையிலை ஆகியவற்றில் காணப்படும் பீடைகளின் முற்றழிப்பிற்கு அசொட்ரின் 60 பாவியுங்கள்.




சகல லங்கெம் விவசாய சேவை நிலையங்களிலும் கிடைக்கும்

450 மி. லீ. ரூ 103-50

# சகலமக்களின் நன்மைகருதி

## ஈரான்-ஈராக் யுத்தத்தை நிறுத்த வேண்டும்

### பிரதமர் இந்திரா கருத்து

புதுடில்லி, டிச. 12

''அணிசேரா இயக்கம் உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் பெரும் பங்காற்றிவருகிறது. ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக் ஆகிய நாடுகளின் பிரச்சினைகளை மட்டும் கருத்தில் கொண்டு, அணிசேரா இயக்கத்தின் கொள்கையைக் குறைத்து மதிப்பிடக் கூடாது''.

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி சஞ்சிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில்மேலும் தெரிவித்துள்ளதாவது.'' சகல மக்களினதும் நன்மைகருதி ஈரான்-ஈராக் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். இவ்யுத்த நிலைமை குறித்து இந்தியா மதிப்பீடு செய்துள்ளது. ஈரான்-ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியை மேற்கொள்ள இந்தியா தயாராகவுள்ளது.

மேற்காசிய நாடுகளின் எண்ணெய் வயல்களை நோக்கி சோவியத்யூனியன் முன்னேறுவதாக மேற்கத்தைய நாடுகள் கருதுகின்றன.

ஆப்கானிஸ்தான் தேசம் பாகிஸ்தான் கூறுவதை ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் பாகிஸ்தான் கிளர்ச்சிகளுக்கு ஊக்கமளிப்பதாக ஆப்கானிஸ்தான் கருதுகிறது. இந்தியா அமெரிக்க விரோத எதிரானதல்ல என்பதை அமெரிக்க மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். காலப்போக்கில் அனைவர்க்கும் அமைதி தேவையாகவிருக்கிறது. இந்தியா அதைத்தான் விரும்புகின்றது.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் அமெரிக்காவின் குடியரசுக்கட்சிக்கும், ஜனநாயகக் கட்சிக்குமிடையே வேறுபாடு இருப்பதாக அது கருதவில்லை. இவ்விரு கட்சிகளின் ஆதரவாளர்களும் இந்தியாவில்இருக்கிறார்கள்.

தாங்கள் விரும்பியது எதனையும் செய்யலாம். ஆனல் மற்றவர்கள் அதனைச் செய்யக்கூடாது என்பதே வல்லரசுகளின் மனப்போக்காகும்.

''டியாகோகார்சியா' தீவில் வெறும் அறிவிப்பின் மூலம் மட்டும் அமைதியை நிலைநாட்டமுடியாது.

இந்திய-சீன எல்லைப்பிரச்னை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் சீன இந்தியாவிடம் மட்டுமன்றி வியட்நாம், பர்மா மலேசியா மற்றும் சில நாடுகளிடமிருந்தும்பிரதேசங்களைக் கோருகிறது என்ருர். எல்லாப் பிரச்னைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளமுடியும்'' என்ருர். (வெ)



யாழ் உயர் நீதிமன்ற நீதி பணம் செய்து வைத்த பின் பதி ஜனுப் எம். ஜமீல் சாவனர், விசேட அழைப்பின் கச்சேரியில் புதிய தொழில் நீதி பேரில் சென்றவர்கள் நீதிமன்ற மன்றம் ஒன்றை அங்குரார்ப் (7-ம் பக்கம் பார்க்க)

### பாக்.-சோவியத் நல்லுறவு

மாஸ்கோ, டிச. 12

''பாகிஸ்தானுடன்நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள சோவியத்யூனியன் விரும்புகின்றது''

மேற்கண்டவாறு சோவியத் ஜனுதிபதி திரு. பிரஷ்னேவ் பாகிஸ்தான் ஜனுதிபதி ஜனைஷியாவுல் ஹக்கிற்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார். (வெ)

கம்பாலா, டிச. 12

உகண்டாவின் பொதுத்தேர்தல் முடிவுகளை தனதுஅங்கீகாரமின்றி வெளியிடவேண்டாமென்று அந்நாட்டின் ஆடைக்கால இராணுவத்தலைவர் தேர்தல் திணைக்களத்தைக் கேட்டுள்ளார்.

### இந்தியாவில் ஜனுதிபதி ஆட்சிமுறை: பிரதமர் இந்திரா கருத்து

புதுடில்லி, டிச. 12

''இந்தியாவில் ஜனுதிபதி ஆட்சிமுறை ஏற்படுவதை நான் ஆதரிக்கவோ, எதிர்க்கவோ இல்லை''

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி சஞ்சிகையொன்றுக்கு அளித்த பேட்டியின்போது கூறியுள்ளார்.

அவர் அப்பேட்டியில் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்; ''எல்லா ஆட்சிமுறைகள் பற்றியும் பொதுவிவாதம் நடத்தப்படவேண்டும்'' என்ருர். (வெ)

## 10 ஆயிரம் அடிக்குக்கீழ் எண்ணெக் கிணறுகள்

### 61,900 தொன் எண்ணெ சைபீரியாவில் கிடைக்குமாம்

வாஷிங்டன், டிச. 12

சோவியத்யூனியனில் மேற்கு சைபீரிய பகுதியில் சுமார் 10 ஆயிரம் அடி ஆழத்தில் காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 61 ஆயிரதது 900 கோடி தொன் எண்ணெயை அகழ்ந்தெடுக்க தற்போதுள்ள அகழ்வு சாதனங்கள் போதாது என்றும் புதிய அகழ்வுமுறைகள் தொழில்நுட்பத்துறையில் கண்டுபிடிக்கப்படவேண்டும்என்றும் அமெரிக்க மத்திய புலனுய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது

சைபீரியாவில் நிலத்துக்கடியில் இவ்வாருன பாரிய எண்ணெக் கிணறுகள் உளளதாக சுவிடிஷ் கம்பனி ஒன்று கண்டுபிடித்துள்ளது. இதுவரை எவருக்கும் தெரியாதிருப்பது புரியாத புதிராக இருக்கிறது என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

### விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படும்

#### மத்திய விவசாய அமைச்சர் அறிவிப்பு

(புதுடில்லி)

''விவசாயிகளின் பிரச்னைகளை அரசு உணர்ந்துள்ளது. அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்த்துவருகின்றது. விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படும். இதன்மூலம் இவர்கள் இலாபம் பெறமுடியும்.''

மேற்கண்டவாறு மத்திய விவசாய அமைச்சர் திரு. ராவ்பிரேந்திரசிங் இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''விவசாயிகள் உரம், பூச்சிகொல்லி மருந்துகள், உழவு இயந்திரம் ஆகியவற்றை வாங்குவதற்கு அரசு உதவியளித்து வருகிறது. சில அரசியல் கட்சிகள் விவசாயிகளைத் தவருன வழியில் இட்டுச் செல்கின்றன. கிராமப்புறங்களிலுள்ள சிறிய விவசாயிகளின் நல்வாழ்விற்கு மத்திய அரசு உதவிவருகிறது'' என்ருர்.

தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு ஆற்றிவரும் நடவடிக்கைகள் குறித்து அ.இ.அ.தி.மு. கவைச் சேர்ந்த திரு. சௌந்தரராஜன் அங்கு எடுத்துக் கூறினர். (வெ)


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்

## ஒரு வருட வைப்புத் திட்டங்கள்

| | |
|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% |
| முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருட வைப்புத் திட்டங்கள்

| | மாதாந்தம் செலுத்தப்படுவது | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது |
|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/- ற்கும் கீழ் | 22% | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | 27% |

### மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனுதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19
கிளைகள்: யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி 2466
அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்தை, தொலைபேசி 534
கண்டி 901/A பேராதனை வீதி, தொலைபேசி 4196
செயற் துணைவர்கள் (ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

''மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS

**மணிவாக்கு**

விசுவாசம் உள்ளவனுக்கு எல்லாம் உண்டு. விசுவாசம் இல்லாதவனுக்கு ஒன்றுமேயில்லை பாவந்நாம விசுவாசமே பல ஆச்சரியமான சாதனைகளை ஆக்குகின்றது. விசுவாசமே பிராணன், சம்சயமே விநாசம்

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# "கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கை: கூட்டுறவு இயக்கம் பாதிப்பு"

## தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. தலைவர் அறிக்கை

(தெல்லிப்பளை)

"அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கை மற்றும் ஊழியர் சம்பளம் நிர்வாகச்செலவுகள் அதிகரிப்பு ஆகியவற்றினால் கூட்டுறவு இயக்கத்துக்கு சோதனை மேல் சோதனை எதிர் நோக்கியுள்ளது. உணவுப் பங்கீட்டு முறைக்குப் பதிலாக அமுல் நடத்தப் பட்டுவரும் உணவு முத்திரைத்திட்டமும் எவ்வளவு காலம் அமுலில் இருக்கும் என்பது தெரியவில்லை. இந்த நிலையில் கட்டுப்பாடான கடின உழைப்பின் மூலம் இந்த இயக்கத்தை நாம் பாதுகாக்க வேண்டும்".

இவ்வாறு தெல்லிப்பளை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. சிவமகாராசா சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளார் ஆண்டறிக்கை மேலும் கூறுவதாவது:

"இந்த அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கட்டுப்பாடில்லாத அவசியமற்ற இறக் மதிக் கொள்கையினால் எமது மின்தறிநிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் துணி உற்பத்திவிலைக்கே விற்க முடியாத நிலைஏற்பட்டிருக்கின்றது. இதனால் கடந்த ஆண்டு வரை லாபகரமாக இயங்கி வந்த மின்தறி நிலையம் உற்பத்திப்பொருட்களின் விற்பனையின்மையால் நட்டமடைந்துள்ளது. எனவே எமது மின்தறிஆலையில் உற்பத்தி செய்யப்படும் துணியின் உற்பத்திச் செலவைக்குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

"விவசாயப் பகுதிதான் எமது அங்கத்தவர்களின் அத்தியாவசியமான பகுதியாகும் இன்றைய அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கொள்கையாலும், கட்டுப்படியான விலை நிர்ணயிப்பு இன்மையாலும், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைச் சங்கம் கொள்வனவு செய்து சந்தைப் படுத்த முடியாதநிலையில் உள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் உள்ள ப. நோ. கூ. சங்கத்தலைவர்கள், கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரிகள், யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்க தலைவர்கள் ஆகியோர் கொண்ட மகாநாட்டில் வெங்காயம், மிளகாய் போன்றவற்றை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து கொழும்பு ப. நோ. கூ. சங்கங்களுக்கூடாக விற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கொழும்பு வெளிச்சந்தையின் விலைத்தளம்பல் காரணமாக எமது விலைக்கு இப்பொருட்களை விற்கமுடியாதிருந்தது. எனவே இம்முயற்சியை ஆரம்பத்திலேயே கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாண்டு நாம் கோழித்தீன் உற்பத்தித்தொழிற்சாலை, தபால்சேவை முகவர் ஆகிய இரு புதிய தொழில் முயற்சிகளை நடாத்துவதற்கு வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இவ்விரு முயற்சிகளும் அடுத்த ஆண்டு ஆரம்பகாலத்தில் பூரணமாகத் தொழிற்படும் எனலாம். எமது சங்கத்தின் கோழித்தீன் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை வசாவிளான் கிளை 20 கட்டிடத்தில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்குரிய இயந்திரங்கள் செய்வதற்கு கேள்விகள் அழைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. மக்கள் வங்கியிடமிருந்தும் கடன்பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கத்தவர்களின் இலாப ஒதுக்கீடும் பொதுச்சபைத் தீர்மானத்தின் பிரகாரம் இம்முயற்சிக்குப் பயன்படுத்தப்படும். இப்புதிய பாரிய முயற்சியை விரைவில் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பாரிய திட்டத்தை நாம் சிறப்பான முறையில் இயக்குவ பட்சத்தில் வடமாகாணத்திலேயே கோழித்தீன் பற்றுக்குறையின்றி விநியோகிக்கக் கூடியதாக எமது சங்கம் அமையும்

"தபால் சேவை முகவராக எமது சங்கத்தைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தபால் நிலையங்கள் இல்லாத கிராமங்களில் உப-தபால் நிலையங்கள் அமைத்து, தபாற் கட்டளை, முத்திரை

(8ம் பக்கம் பார்க்க)

# விக்கினம் தீர்க்கும் விக்னேஸ்வரன்

இராகம்: சிறீரஞ்சனி தாளம்; ஆதி

பல்லவி

சித்தி விநாயகனே சிவகாமி ஈன்றகன்றே
பக்தியாய் நின்ற மலர்ப் பாதம் பணிந்து நின்றேன்
(சித்திவிநாயகனே)

அனுபல்லவி

எத்துணையுமின்றி ஏங்கிநின்றேன் கணேசா
விக்கினங்கள் தீர்த்துக் காத்தருளவேண்டும்
(சித்திவிநாயகனே)

சரணம்

சித்தியும் புத்தியும் வித்தை புகழுந்தந்து
முதிக்கும் வித்தானாய் வேதமுதலுமானாய்
சத்திவேல் முருகனின் சோதரனே வல்லடா
சதா சிவனின் மகனே ஏரம்பனே சரணம்
(சித்திவிநாயகனே)

—சங்கீதபூஷணம் வி. பரமலிங்கா—

(இன்று விநாயகர் சஷ்டியை ஒட்டி இக் கவிதை பிரசுரமாகிறது.)

# நமது நோக்கு

## தொற்று நோய்த்தடுப்பு.

மீண்டும் நமது நாட்டில் காலரா எனப்படும் வாந்திபேதி நோய் தீவிரமாகப்பரவும் ஆபத்துத் தோன்றியுள்ளது.

மன்னார்ப் பகுதியில் மட்டும் வாந்திபேதி நோயினால் இருபத்தொருபேர் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

சிலாவத்துறையில் ஆரம்பமான இந்தநோய் தாழ்வுப்பாடு, தலைமன்னார் ஆகிய இடங்களுக்குப் பரவியிருக்கிறது.

இதர இடங்களுக்கும் இந்த நோய்பரவக் கூடிய ஆபத்து அதிகரித்திருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது சுமார் ஆறு ஆண்டுகளுக்குமுன் இதே வாந்திபேதிநோய் நாட்டில் பரவி சில உயிர்களைப் பலி கொண்டது; மற்றும் பலர் இதனால் பாதிக்கப்பட்டனர்.

இந்த நோய் வெளியிலிருந்து இங்கு கொண்டு வந்திருக்கப்படலாமென்று கூறப்படுகிறது.

காரணம் என்னதான் இப்போது கூறப்படுகின்றபோ இதே காரணங்கள் தான் இதற்கு முன்னரும் வாந்திபேதியானலும் வேறு தொற்று நோயானலும் இங்கு காணப்பட்டதும் கூறப்படுவதுண்டு.

தொறறுநோய் பரவுவதற்குக் காரணம் என்னவென்று கண்டுபிடித்து அது மேலும் பரவாமல் தடுப்பு நடவடிக்கை எடுககப்பட வேண்டியது அவசியம்தான்.

இதற்காக, நோய் பரவத் தொடங்கிய பின்தான் அவற்றைக் கண்டுபிடித்துத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமா?

வருமுன் காப்போனாக சுகாதார அமைச்சும், சுகாதார சேவையிலுள்ளோரும் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாதா?

வடக்கு, வடமத்திய பகுதியில் தொற்றுநோய் பரவினால் அந்த நோய்பற்றி ஆராய்ந்து அறிந்துகொள்வதற்கு யாழ்ப்பாணத்திலேயோ அநுராதபுரத்திலேயோ ஆய்வுகூட வசதி சரியாக இல்லை. இதனால் இவை பற்றிக் கொழும்புக்கு அனுப்பியே ஆராயவேண்டியிருக்கிறது.

குடிநீர் வசதி, சாக்கடை வசதி, மற்றும் நாட்டின் சுகாதாரத்தைப் பேணி, தொற்றுநோய்கள் பரவாமல் தடுப்பதற்குமான சகல வசதிகளையும் சுகாதார அமைச்சும் மற்றும் இதற்குப் பொறுப்பான அதிகாரிகளும் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

1981-ம் ஆண்டுப் புது வருடத்திலிருந்து தொற்று நோய் தடுப்பு வேலைகளை அதிகரித்த அளவில்தீவிரமாகச் செயல்படுத்துவதெனச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

இத்தீர்மானம் சரியான முறையில் செயல்படவேண்டும் என்பதே எமது விருப்பம்.

# மக்கள் கருத்து

## தமிழாராய்ச்சி மகாநாடு

ஜனவரி மாதம் 4ம் திகதி மதுரையில் நடைபெறவுள்ள ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் நிகழ்ச்சிகளை இலங்கையிலுள்ள மக்கள் தொலைக்காட்சியில் கண்டு களிப்பதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

வெகுவிமரிசையாக நடைபெறவுள்ள இம்மகாநாட்டை மதுரைக்குச் சென்று கண்டு களிக்கமுடியாத நிலையில் பலர் உள்ளனர். இதற்குக் காரணம், எல்லா மக்களிடமும் மதுரைக்குச் செல்வதற்குப் பொருளாதார வசதியில்லை. அடுத்தது; பொருளாதார வசதியிருந்தும் போக்குவரத்துக் கஷ்டங்களினால் இம்மகாநாட்டிற்குச் செல்லமுடியாத நிலை. தொலைக்காட்சியைத் தெளிவாகக் கண்டுகளிப்பதற்காக இலங்கையில் அமைக்கப்பட்டுவரும் கோபுரத்தின் கட்டிட வேலைகளை விரைவாகப் பூர்த்தி செய்து, இலங்கை மக்கள் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும்.

தி. வெற்றிவேலுப்பிள்ளை
வட்டுக்கோட்டை.





**தமறோன்**

அனைத்தையும் அழிப்பது

தமறோன் 60% எல். ஸி. தனிச் சிறப்புள்ள கிருமிநாசினி. அது பல விதங்களில் செயற்படும். பூச்சிகளின் உடல் முழுதும் செறிந்தும், நிலைத்து நின்றும், பட்ட மாத்திரத்திலும் உட்சென்று தாக்கியும் செயற்படும் பல சிறப்புகள் கொண்டது. கொறிக்கும், உறிஞ்சும், துளைக்கும் பூச்சி புழுக்களையும், மூட்டுப் பூச்சி, அழுக்கணவன், வண்டு, அந்துப்பூச்சி, மயிர்க்குட்டி, இலைப்பூச்சிகள், தாவர மூட்டுப் பூச்சிகள், இலைத் தத்துவெட்டிகள், சந்துக்குத்திகள், மற்றும் நெல், பருத்தி, நாரத்தை முதலாம் புளி மரங்கள், காய்கறிகள், மிளகாய், கரும்பு, அவரை, சோளம், உருளைக்கிழங்கு. வெங்காயம், புகையிலை, கனி மரங்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைத் தாக்கும் எல்லாப் பூச்சி இனங்களையும் கட்டுப் படுத்த உலகெங்கும் தமறோன் பரவலாகப் பாவிக்கப்படுகிறது.

தமறோன் பல முனைச் சக்தி கொண்டதாகையால், பல்வேறு விதமான பூச்சியினத் தாக்குதலுக்கு ஆளாகும் பயிர்களுக்குப் பாவிக்க அது மிகவும் ஏற்றது.

பாவியுங்கள் BAYER தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

**ஹேகெம் லிமிட்டெட்**

50, பொஸ்டர் ஒழுங்கை
கொழும்பு 10.
தொலைபேசி: 93563

meIADS

50 மி. லீட்டர் ரூபா 13-00
100 மி. லீட்டர் ரூபா 23-00
200 மி. லீட்டர் ரூபா 42-50
450 மி. லீட்டர் ரூபா 87-50
4.5 லீட்டர் ரூபா 825-00

# "சிறிமாவுக்குக் கிடைத்த வரவேற்புக்கு மிளகாய் வெங்காயமே காரணம்"

## பாராளுமன்றத்தில் 'அமிர்'

(கொழும்பு)

யாழ்ப்பாணம் விஜயம் செய்த திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு யாழ். மக்கள் அளித்த பெரும் வரவேற்புக்குக் காரணம் திருமதி பண்டாரநாயக்கா தமது ஆட்சிக் காலத்தில் உள்ளூரில் மிளகாய், வெங்காய உற்பத்திக்கு ஊக்கம்அளித்து வந்தமையே. இன்று அந்நிலைமாறி மிளகாய், வெங்காயம் போன்ற உள்ளூர் உற்பத்திகளை அரசு இறக்குமதி செய்துவருகிறது. இதன் காரணமாக வடபகுதி விவசாயிகளின் இல்லங்களில் வெங்காயம், மிளகாய் ஆகியன விற்பனைசெய்ய முடியாதநிலையில் தேங்கிக்கிடக்கின்றன.

எனவே வெங்காயம், மிளகாய்க்கு ஸ்திரவிலை ஒன்றை நிர்ணயிப்பதோடு சந்தைப் படுத்தும் திணைக்களம் அதனைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

வர்த்தக அமைச்சின் நிதி ஒதுக்கீடுமீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையால் உபஉணவுப்பொருட்கள் குறிப்பாக மிளகாய், வெங்காயம் பயிரிடும் நிலப்பரப்பின் அளவு வடபகுதியில்மிகவும் குறைந்து வருகிறது. இதனால் யாழ். விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெங்காயம், மிளகாய்க்கு ஸ்திரமான விலையை நியமிக்கும்போது அப்பொருட்களின் உற்பத்திச் செலவுகளையும் பரிசீலிக்கவேண்டும். (ம-இ)

# மன்னார் மாவட்டத்தில் காலரா அபாயம்!

(மன்னார்)

சிலாவத்துறையில் தலைதூக்கிய காலரா நோய் மன்னார் மாவட்டம் முழுவதும்பரவிவருகிறதுநமன்னார் பகுதியில் 18 பேருக்கு காலராநோய் கண்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தலைமன்னார் பகுதியில் ஒருவருக்கும் பேசாலையில் ஒருவருக்கும் காலரா நோய்இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

சுகாதாரஅதிகாரிகள்காலரா நோய் தடுப்பு நடவடிக்கைகளைத்தீவிரமாகமேற்கொண்டு வருகின்றனர்கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறும்;ஏரி குளங்களில் நீராடுவதைத் தவிர்க்கும் படியும், சுகாதாரத்தைப் பேணும்படியும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடுழியச்சிறை!

(மாவிட்டபுரம்)

திருட்டுக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நபர் ஒருவருக்கு ஒரு மாதக்கடுழியசிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சதாசிவம் என்பவரது வீட்டினுள் புகுந்து சீலைகள் உட்பட மற்றும் சில பொருட்களைக்களவாடியயட்டக்களப்பைச் பிரான்சிஸ் பிள்ளை அன்ரன் ராஜீவன் என்னும் இளைஞர் பொதுமக்களால் துரத்திப்பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் மீது காங்கேசன் துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தபோது இவர் சுற்றவாளி எனக் கூறியதால் வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது, பின்னர் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப் பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு 200 ரூபா அபராதம் விதித்த மல்லாகம் நீதிபதி அதனைச் செலுத்தமுடியாதநிலையிலிருப்பதாக அவர் தெரிவித்ததால் ஒரு மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

# மயானக் கொலை: சந்தேகநபர் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை மயானக் கொலை சம்பந்தமாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் உயர் நீதிமன்ற அனுமதியின் மீது 2500 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஏழாலையைச் சேர்ந்த க. தில்லையம்பலம் என்பவரை தெல்லிப்பளை மயானத்தில் வைத்து கத்தியால் வெட்டிக் கொலை செய்தது தொடர்பாக மல்லாகத்தைசேர்ந்தஎம் மகாலிங்கம் என்னும் நபர்கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவரை பிணையில் விடுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தினையடுத்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி திரு சி. ஆர். இராஜசிங்கத்தினால் 2500 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

3 மாதத்திற்கு ஒருமுறை உயர் நீதிமன்றத்திற்கு இவர் குறித்த விபரம் அறிவிக்கப்படல் வேண்டுமெனவும் உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை பெப்ரவரி 27ம்திகதிக்குஒத்திவைத்தார்.

# பால்சேகரிப்பு நிலையம்

(மன்னார்)

மன்னாரில் சுமார் 6 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள பால் சேகரிப்பு விற்பனவு நிலையம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் திறந்து வைக்கப்படும்.

இந்நிலையத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைப்பதற்கென கிராமியக் கைத் தொழில் அமைச்சர் திரு.எஸ். தொண்டமான் பிராந்தியஅபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார்.


# தேசிய திரைப்பட விழா
## ஜனாதிபதி விருது 1980

# 24 மாவட்டங்களிலுமுள்ள சிறந்த படமாளிகைகளுக்கான சான்றிதழ்கள்

## பின்வரும் படமாளிகைகள் "ஏ" "பி" "சி" தரங்களுக்காக ஜனாதிபதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

| மாவட்டத்தின் பெயர் | 'ஏ' தர படமாளிகைகள் | 'பி' தர படமாளிகைகள் | 'சி' தர படமாளிகைகள் |
|---|---|---|---|
| 1. அம்பாந்தோட்டை | — | பெல்கோ சினிமா — பெலியத்தை | ரெஜீனா படமாளிகை — வலஸ்முல்லை |
| 2. அம்பாறை | — | விஜயா படமாளிகை — அம்பாறை | அசோகா படமாளிகை — கல்முனை |
| 3. அனுராதபுரம் | — | அஜந்தா சினிமா — கக்கிராவை | ராணி படமாளிகை — கெக்கிராவை |
| 4. இரத்தினபுரி | நியூ இம்பீரியல் ரோக்கிஸ் — இரத்தினபுரி | நில்மினிபடமாளிகை ...... அஹலியகொட | கீதன் சினிமா — கலவானை |
| 5. கண்டி | ஓடியன் சினிமா — கண்டி | நீகல் படமாளிகை — கம்பளை | அபயா படமாளிகை — ஹெல்லுகங்கை |
| 6. கம்பஹா | நில்மினி சினிமா நியூ — வத்தளை | எலைற் சினிமா — கொச்சிக்கடை | ஜயலத் சினிமா — கட்டுநாயக்க |
| 7. களுத்துறை | மினேர்வா படமாளிகை — களுத்துறை | வின்ஸ் படமாளிகை — வதுவை | வருணா சினிமா — தர்கா நகர் |
| 8. காலி | சரசவி படமாளிகை — காலி | அனுரா சினிமா — அம்பலாங்கொட | நியூ றேக்கா படமாளிகை — எல்பிட்டி |
| 9. குருநாகல் | நியூ இம்பீரியல் ரோக்கிஸ் — குருநாகல் | சந்தலங்கா சினிமா — சந்தலங்காவை | ரஞ்சனி சினிமா — ஹெட்டிப்பொல |
| 10. கேகாலை | சாயா சினிமா — கேகாலை | வீனஸ் படமாளிகை — மாவனெல்லை | சம்பா சினிமா — தெஹியோவிற்ற |
| 11. கொழும்பு | நீகல் படமாளிகை — கொழும்பு | மொன்றோ சினிமா — நாரஹேன்பிட்டி | கல்யாணி சினிமா — ஈத்துறகிரிய |
| 12. திருகோணமலை | — | ஸ்ரீகிருஷ்ணா படமாளிகை — திருகோணமலை | அனோமா படமாளிகை — கந்தளாய் |
| 13. நுவரேலியா | — | நீகல் படமாளிகை — நுவரேலியா | றேவதி படமாளிகை — பூண்டுலோயா |
| 14. பதுளை | — | எத்வில் சினிமா — பண்டாரவளை | — |
| 15 புத்தளம் | — | தர்சன படமாளிகை — கொஸ்வாடி | சமாரா படமாளிகை — நாத்தாண்டிய |
| 16. பொலநறுவை | — | சமுபகார சினிமா — ஹிங்குராகொட | அனுரா படமாளிகை — மெதிரிகிரி |
| 17. மட்டக்களப்பு | — | நீகல் படமாளிகை — மட்டக்களப்பு | — |
| 18. மன்னார் | — | ஐன் படமாளிகை — மன்னா | ஸ்ரீ பரந்தன் படமாளிகை — பேசாலை |
| 19. மாத்தளை | கனிஷ்கா படமாளிகை — மாத்தளை | விசாக்கா சினிமா — தம்புள்ளை | ஜெயந்தி சினிமா — இரத்தோட்டை |
| 20 மாத்தறை | புரோட்வே படமாளிகை — மாத்தறை | சாந்தனி சினிமா — வெலிகம | — |
| 21 முல்லைத்தீவு | — | சிவசோதி சினிமா — முல்லைத்தீ | ஜெனி சினிமா — முல்லைத்தீவு |
| 22. மொனராகலை | — | ஸ்ரீ ரம்யா படமாளிகை — மொனராகலை | காவலி சினிமா ..... பிபிலை |
| 23. வவுனியா | — | றோயல் படமாளிகை — வவுனியா | — |
| 24 யாழ்ப்பாணம் | மனோகரா படமாளிகை — யாழ்ப்பாணம் | ஈஸ்வரன் படமாளிகை — சினிமா[illegible] | வெல்லி சினிமா — மானிப்பாய் |

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,
224, பௌத்தாலோக மாவத்தை, — கொழும்பு-7.
(7602)

# பரீட்சை மோசடி

## இளைஞர்கள் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

க. பொ. த. (சாதாரண பரீட்சை மோசடி தொடர்பாகக் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்ட இரு இளைஞர்களையும், மல்லாகம் நீதிபதி பிணையில் செல்ல அனுமதித்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் க. பொ. த (சாதாரண) பரீட்சை எழுதி இளைஞர் ஒருவரும் வெளியின்ற இளைஞர் ஒருவரு சேர்ந்து பரீட்சையில் மோசடி செய்ததாக காங்கேசன்துறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் முன் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 17-திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் பிணையில் விடுமா கோரும் விண்ணப்பமொன்றை மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் திரு. அ. குமரகுரு, திரு. சிவஸ்ரீதரன் ஆகியோர் சமர்ப்பித்தனர். நீதிபதி திரு. சி. ஆர் இராஜசிங்கம் அதனை ஏற்று இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தார்.

## பாடசாலையில் திருட்டு

(மனஜர்)

நள்ளிரவில் பாடசாலை ஆசிரியர் இல்லாதபோது பாடசாலை உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன.

மடுரோட் ஆலங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இச்சம்பவம் நடைபெற்றது. யூனிசெப் நிறுவனத்தால் இப்பாடசாலைக்கு வழங்கப்பட்ட உபகரணங்களே திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## சுட்டுக்கொலை

(ரோம்)

தென் இத்தாலியில் அண்மையில் இடம்பெற்ற பூகம்பத்தின் நிவாரணப்பணிகளில் மோசடி புரிந்ததாகக் கூறப்பட்ட மாநகர மேயர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். (இ)

## தேநீர் விருந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் சிரேஷ்ட விதிப்பரிசோதகராக கடமையாற்றிய திரு. எஸ். சுப்பிரமணியம் டிப்போ பரிசோதகராக இடமாற்றம் செய்யப்பட்டதை ஒட்டி யாழ் பஸ் நிலைய ஊழியர்கள் நேற்று அவருக்கு தேநீர் விருந்தளித்தனர்.

ஊழியர் மன்ற உறுப்பினர் திரு. ரி. கந்தசாமி தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. (இ)

## சோவியத் அதிபருக்கு பலத்த பாதுகாப்பு

புதுடில்லி, டிச. 12

இந்தியாவில் நான்குநாள உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சோவியத் அதிபர் திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவ் இன்று நாடுதிரும்பினர்.

ஜனாதிபதி மாளிகையிலிருந்து பாலம் விமான நிலையத்திற்கு மோட்டார் பவனியாக அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது, இந்தியாவிலுள்ள ஆப்கானிஸ்தான் அகதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தலாமென்ற இரகசிய பொலிசாரின் எச்சரிக்கையை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. (இ)

## நல்லுறவுச்சபை காரியதரிசி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"சமரசமாகத் தீர்க்கமுடிவு' என்ற தலைப்பின் கீழ் 6-12-80ம் திகதிய 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி குறித்து காங்கேசன்துறை பொலிஸ்-பொதுசன நல்லுறவுச்சபைக் காரியதரிசி திரு. ஏ. எஸ். வஸ்தியாம்பிள்ளை பின்வருமாறு எமக்கு எழுதியுள்ளார்.

"குரும்பசிட்டி சன்மார்க்க சபை அங்கத்தவர்கள் மனுக்கள் பற்றிய விடயம் பரிசீலிக்கப்பட்டது என்ற செய்தி தவறானது.

மேற்படி கூட்டத்தில் எமது நட்புறவுச்சங்க அங்கத்தவர் ஒருவர் சன்மார்க்கசபை பற்றிய பிரச்சினையை எழுப்பியபோது எழுத்துமூலம் எமக்கு அறிவிக்கப்பட்டால், அதை அலசி ஆராய்ந்து பார்த்து ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது".


குளுமை, மலர்ச்சி, வாசனையுடன் முழு நாளும் திகழ...

பாவியுங்கள்

ரெபெக்கா லீ

வைல்ட்:ப்ளவர்

டால்க்

முகத்திலும் மேனியிலும், மிருதுவான, இதமான வாசனையூட்டிய ரெபெக்கா லீ வைல்ட்:ப்ளவர் டால்க் தடவி, நிலைத்து நிற்கும் மலரின் நறுமணத்துடன் திகழுங்கள்.

உங்களுக்கு அழகூட்டும் அருந்துணை ரெபெக்கா லீ!

TAL-461

சில்லறை விலை ரூ. 6/10



**SANTHI** (JAFFNA) DAILY 5 SHOWS 10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
★ CHARLES BRONSON ★ JIM BROWN
**"THE DIRTY DOZEN"**
ACTION PACKED COLOR MOVIE

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
வெற்றிகரமான 2-வது மாதம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)

**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி10-30, 2-00, 6-00 & 9 30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராஜா** (யாழ் நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

இப்பொழுது வெற்றி நடை போடுகிறது!
**ராணி** (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00 6-00, 9-30.
காதல் காவியம், ஆனால் கண்ணீர்க்காவியம்!



செவன் ஆர்ட்ஸ்
அளிக்கும்
**ஒருதலை காதல்**
இன்றே குடும்பத்தோடு பார்த்து மகிழுங்கள்!

## ஸ்கந்தா வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்திற்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இரண்டு கோல்களால் வெற்றியீட்டியது. இப் போட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு தேநீர் விருந்தளிக்கப்பட்ட போது வடபிராந்திய தொழில் நீதிமன்ற நீதிபதி திரு எஸ். என். குருசாமி, தொழில் நீதிமன்றங்கள் செயல்படும் முறை பற்றியும் விளக்கிக் கூறுவதையும், அவர் கூறுவதை விருந்தினர்கள் உன்னிப்பாகக் கவனிப்பதையும் படத்தில்காணலாம். வலமிருந்து இடமாக சாவகச்சேரி மாவட்ட பதில் நீதிபதி திரு. கந்தசாமி, தொழில் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ் என். குருசாமி, யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்டினர், உயர் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். ஜமீல், வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.பி மகேந்திரன் ஆகியோர் உள்ளனர். தொழில் நீதிமன்ற நீதிபதி தொழில் மன்றங்கள் பற்றி விளக்குகையில்; "தொழில் நீதி மன்றங்கள் செயல்படும் முறையும், நோக்கப்படும் சிரமமான காரியங்களினதும் நீதிமன்றத் தீர்ப்பு எந்த ஒரு சட்டத்தினாலும் நிர்ப்பந்திக்கப்படாத ஒன்று ஆனால் அது ஒப்புரவானதும், நியாயமானதாகவும் இருக்க வேண்டும் என்பதையும், இப்படியான தீர்ப்புகளின் இலக்கு தொழில் அமைதியை நிலைநாட்ட வேண்டும்" என்றும் கூறினர். (கொ)

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - சுஜாதா
**உறவுசொல்லஒருவன்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
**ஞானக்குழந்தை**

**வெலிங்டன்** ... (மாவிட்டபுரம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி
**காவல் தெய்வம்**

கடைசி வாரம்
**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 ,9-30
எம். ஜி. ஆர். - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**வின்ஸர்** (யாழ்நகர்).
Daily at 10-30 A. M., 2-00, 4-30, 7-00 & 9-30 P.M. only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
**FEAR IS THE KEY**
Scope-Color Thrill & Action

**ராணி** - (யாழ்.நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00 இரவு 9-30
**ஒரு தலை காதல்**
(குடும்பப் பெண்ணின் கதை)

## சுன்னாகம் றேயல் வி. க. கரபந்தாட்டப்போட்டி

(சுன்னாகம்)

சுன்னாகம் றேயல் விளையாட்டுக்கழக வருடாந்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி சென்ற 6ம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

சுன்னாகம் பட்டினசபை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றுவரும் இக்கரபந்தாட்ட சுற்றுப்போட்டியை வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திரு. எஸ் இராஜேந்திரா ஆரம்பித்து வைத்துள்ளார்.

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள சுமார் 20 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றும் இப்போட்டிக்கான ஒழுங்குகளை றேயல் விளையாட்டுக் கழகச் செயலாளர் திரு சி. நடராசா செய்துள்ளார். (ச)

## இடமாற்றம்

(மன்னார்)

சிறந்த சமூகசேவையாளரும் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் உபதலைவரும், மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் 4 வருடங்கள் சேவையாற்றியவருமான டாக்டர் கே. மயிலேறும்பெருமாள் மத்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டி சனசமூக நிலையம் அதன் 48 வது ஆண்டு விழாவையொட்டி வடமராட்சி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் கரபந்தாட்ட சுற்றுப் போட்டியொன்றை நடாத்தவிருக்கிறது.

இச்சுற்றுப்போட்டி ஜனவரி மாதம் 15 ம் திகதி தொடக்கம் நடாத்தப்படவிருக்கிறதாகவும் இதில் பங்குபற்றும் சழகங்கள் மேற்படி சனசமூக நிலையச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றி தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பநிறுவனத்திற்கும் யாழ். இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இருகோஷ்டிகளும் தலாமூன்றுகோல்களைப்போட்டமையினால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## தப்பிய கைதி மீண்டும் கைது

(மாவிட்டபுரம்)

சிகிச்சை பெற்றபோதுயாழ். ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியோடிய விளக்கமறியல் கைதி ஒருவர் சுன்னாகம் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

இவரை சுன்னாகம் பொலிசார் யாழ் சிறைச்சாலை அதிபரிடம் மீண்டும் ஒப்படைத்துள்ளனர்.

ஏழாலை மத்தி மடத்துவாசலைச் சேர்ந்தகதிரன் தங்கராசா (32 வயது) என்னும் நபர் 3 வாரங்களுக்கு முன் திருட்டுச் சம்வம் தொடர்பாக சுன்னாகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் கோப்பாய் பொலிசாருக்கும் அவர் தேவைப்பட்டதால் அவர்களிடம் ஒட்படைக்கபேட்டார் நீரிறைக்கும் இயந்திரத் திருட்டு ஒன்று குறித்து இவரை யாழ். நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்ததையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந் நபர் சுகயீனமுற்றதால் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

இவர் அங்கிருந்து தப்பியோடிவிட்டதையடுத்து சுன்னாகம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு சுகுணேந்திரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இவர் மீது வலைவிரித்ததுமல்லாகம் ஏழாலை வீதியால் இவர் சென்றுகொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலை அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## திருடிய சிறுவன் சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

50 ரூபாவைத் திருடிய 13 வயதுச் சிறுவன்ஒருவனை அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதிக்குமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சந்தசாமி பொன்னுராசா என்பவரது கடைக்குச்சென்ற, அவ்விடத்தைச் சேர்ந்த கதிர்காமநாதன் என்னும் சிறுவன் கடைக்காரர் உள்ளே சென்றபோது 50 ரூபாவை திருடிச் சென்றதையடுத்து சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டதன் பேரில் இச் சிறுவன் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டான். நீதிபதி இவரை அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப்பாடசாலையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார.

## பாடசாலையில் திருட்டு

(மாவிட்டபுரம்)

பாடசாலையொன்றிலிருந்து மேசை, கதிரைகள் திருடப்பட்டுள்ளன.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்திலேயேஇத்திருட்டு நடந்தது.

முதல்தினம் பாடசாலையை மூடிவிட்டு மறுநாள் வந்து பார்த்தபோது மேசை,கதிரைகள் களவுபோயிருந்ததை அடுத்து தலைமையாசிரியர் வை. யோகேஸ்வரன், சுன்னாகம் பொலிசில் புகார்செய்துள்ளார். சார்ஜன்ட் சந்திரதாசா இது குறித்து விசாரணை செய்துவருகிறார்.

## தரமற்ற அரிசி

(மன்னார்)

முகாங்கள் பல. நோ. கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகிக்கப்படும் அரிசியில் வண்டுகள், புழுக்களும் காணப்படுகின்றது.

பாவனைக்குதவாத இந்த அரிசியை பாவனையாளர்கள் வாங்குவதற்கு தயக்கமடைகின்றனர்.

இதோ
இங்கிலிஸ் தேமஸ்
பிளாஸ்குகள்
19 Q 19 QH. 25 Q.
ஆகிய மொடல்கள்
விற்பனைக்கு வந்துவிட்டன
தொடர்பு கொள்ளவும்.
நாபன்ஸ் ரேட்ஸ்
சேகரம் கட்டிடம்,
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 693

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

இதோ
விற்பனையாகிறது
மினி பஸ்ஸிற்குரிய
700 X 14
700 X 15
650 X 16
சுமிட்டோமோ ரயர்கள்
கிடைக்குமிடம்:
நாபன்ஸ் ரேட்ஸ்,
சேகரம் கட்டிடம்,
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 693

## விவசாயம் பாதிப்பு

(மன்னார்)

வங்காலையில் போதியமழை இல்லாததால் வரட்சி நிலவு கிறது. இதனால் காலபோகவிவசாயம் பாதிப்படைந்து வருகிறதுஎன்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## குடிநீர்ப்பிரச்னை

(மன்னார்)

வங்காலைக் கிராமத்தில் இது வரை காலமும் நிலவி வந்த குடிநீர்ப்பிரச்னை விரைவில தீர வுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## எம். டி.எச்.சின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா பிரேரணை ஒன்றை முனமொழிந்தார்.

"உருக்குக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. சில்வாவை ஏன் தண்டிக்கக்கூடாது என்பதற்கு அவரை காரணம் காட்டுமாறு கோருகிறது" என்ற பிரேரணையை பிரதி நீதி அமைச்சர் ஆமோதித்தார்.

இவ்வழக்குத் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக நேற்று பிற்பகல் 4 30 மணிக்கு அவரை ஆஜராக்குமாறு சபா நாயகர் படைக்கலச் சேவிதர் பணித்தார்.

இதன் பிரகாரம் சபை பிற் பகல் 4.30க்குக் கூடியதும் முழுச்சபையும் நீதிமன்றமாகக் கூடியது.

திரு, சில்வாவை சபையின் தடைக் கோட்டுக்கு அருகே அழைத்து வருமாறு பணித்தார்.

படைக்கலச் சேவிதர் அவரை அழைத்துவந்ததும் தடைக்கோட்டுக்கு அப்பால் போடப்பட்டிருந்த கதிரையில் வந்து அமர்ந்தார். அப்போது அரச தரப்பிலிருந்து எழுந்து நில்! எழுந்துநில்!! என்றுகுரல்கள் எழுந்தன. உடனே அவர் ஆசனத்தை விட்டு எழுந்து நின்றார்.

சபாநாயகர் அமருமாறு கூறியபின்னர் அவர் மீண்டும் அமர்ந்து கொண்டார்.

கடுவலை உறுப்பினர் பாராளுமன்றக்கட்டிடத்தை விட்டு வெளியேறியபோது 'கடுவலைக்க யாரும் அப்ப பார்க்கிறன். எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை' என்று கூறியிருக்கிறீர். உம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு என்ன விளக்கமளிக்கிறீர் என்று சபாநாயகர் கேட்டார்.

தாம் விளக்கமளிக்க இரண்டு வாரகாலம் அவகாசம் வழங்குமாறு திரு. சில்வா கோரினார்.

அரசாங்க உறுப்பினர்கள்! இல்லை! இல்லை!

திரு. வின்சன்ட் பெரேரா: கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பல குரல்கள்: இன்று நடவடிக்கை எடுக்காவிட்டால் சபையிலிருந்து வெளியேற மாட்டோம்.

சபாநாயகர்: புதன்கிழமை வரை அவகாசம் வழங்கலாம்.

பல குரல்கள்: இல்லை! இல்லை!

திரு. அமிர்தலிங்கம்: ஒத்தி வைப்பது நியாயமற்றது. இது சபையைப் பாதிக்கும் பாரதூரமான விடயம்.

(இவ்வேளையில் உறுப்பினர் கரகோஷம் செய்தனர்.)

திரு. அமிர்தலிங்கம்: நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆனதினால் திங்கள் பிற்பகல் 4 மணிக்கு எடுப்போம்.

சில குரல்கள்: மருத்துவச் சான்றிதழ் அனுப்பினால் மேலும் பின்போடுவதா?

திரு. வின்சன்ட் பெரேரா: சொந்தப்பிணையில் விடலாம்.

அவிசாவலை எம். பி: திரு. பிரேமரட்ன (யூ. என். பி.) நாம் வெளியேறமாட்டோம். இன்றே தண்டனை வழங்க வேண்டும்.

பிரதி அமைச்சர் பிரேமச்சந்திரா: என்ன காரணத்துக்காக 2 வார அவகாசம் கோருகிறார்.

பானந்துறை எம். பி: திரு. நெவில் பெர்னாண்டோ ((யூ. என். பி.): இன்றுதான் சம்பவம் நடந்ததால் உறுப்பினர்கள் கோபத்துடன் இருக்கிறார்கள். எனவே நியாயத்துடன் சிந்திக்கமாட்டார்கள் எனவே ஒத்திவைப்பதுதான் சரி.

அரச உறுப்பினர்கள்: நீர் அமரும். நீர் அமரும்.

திரு. காமினி திசாநாயக்கா: இச்சம்பவம் குறித்து அரசும் எதிர்க்கட்சியினரும் மிகுந்த வேதனையுடன் தான் இருக்கிறார்கள். நாம் நீதிமன்றமாகச் செயற்படப் போகிறோம். எனவே குற்றவாளியின் கோரிக்கைக்குச் செவி சாய்க்க வேண்டும். திங்கள் 4-30 மணிவரை அவகாசம் கொடுப்போம்.

கம்பளை எம். பி. திரு. டபிள்யூ.பி.பி. திஸ்ஸநாயக்கா (யூ.என. பி): 14 வருடங்கள்

## தொண்டமான் யாழ். வந்து திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ், தொண்டமான் நேற்று தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து திரும்பினார். (இ)

## இன்று நடைபெறும்

## கூட்டுறவு மகளிர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்குச் சங்க கூட்டுறவு மகளிர் கருத்தரங்கு இன்று பிற்பகல் சங்க மண்டபத்தில் தலைவி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

நல்லூர் எம். பி. திரு, எம். சிவசிதம்பரம், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. எம். பி. கோபல்லகம ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் இக் கருத்தரங்கில் இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் திருமதி த. துரைசிங்கம், செல்வி எஸ். சின்னப்பு ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

## யாருடையது?

யாழூர்துரை என்பவரால் யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில் கண்டெடுக்கப்பட்ட சூட்கேஸ் திறப்பு கோர்வை (படத்துடன்) 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

ஐக்கியதேசியக்கட்சியின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றிய சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சபையிலிருந்து வெளியேறியபோது பயமுறுத்தப்பட்டிக்கிறார். எனக்குப்பயமாக இருக்கிறது நான் 75 மைல்கள் செல்ல வேண்டும். இவர் ஞாயிற்றுக்கிழமை டு ாய்க்குப் போய் விட்டால் என்ன செய்வது.

திரு. லலித் அத்துலத்முதலி: பாஸ்போர்ட் டைப் கையளித்தபின்னர் அவரை விடுவிப்போம்.

சபாநாயகர்: பிணையில் விடுதலை செய்யும் வரை பாதுகாப்பாக வைத்திருக்கவும் பாஸ்போர்ட்டைக் கையளித்த பின்னர் 5 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிப்போம்.

(ம-கு)

## கட்டுப்பாடற்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகம், தந்தி கொடுத்தல் போன்ற சேவைகளை ஆற்றும். பலாலி, இளவாலை, பண்டலை, கோல்லங்கல்ட்டி. கருகம்பானை, காங்கேசன்துறை, வீமன்காமம், மயிலிட்டி வடக்கு, தெல்லிப்பழை கூட்டுறவுவைத்தியசாலையடி, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையடி, ஒட்டகப்புலம் ஆகிய கிராமங்களில் உப-தபால் நிலையங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

"மக்கள் கடை"
(மின்சார நிலையவீதி, பஸ் நிலைய அருகாமை)

திறப்பு விழா
13-12-1980 மாலை 5-00 மணிக்கு
யாழ். பாநகர முதல்வர்
திரு. இரா. விசுவநாதன் திறந்து வைப்பார்.

இங்கே பொலித்தின் பைக்கற்றில் அடைக்கப்பட்ட பொருட்கள், நத்தார் பண்டிகைக்குரிய பொருட்கள், மகளிர் குழு உற்பத்திப் பொருட்கள் முதலியன விற்பனை செய்யப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
1980-12-12.

## உருக்கு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னத்தலைவரைச் சந்திக்கச் சொன்னார்: அவரைச் சந்தித்து கேட்டபோது அவர் அமைச்சின் செயலாளரைச் சந்திக்கச் சொன்னார்.

"மீனே, பாலோ சாப்பிடாத ஒருவர் உயிரற்றவர். எனவே உயிரற்ற ஒருவரை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமித்திருக்கிறீர்கள்."

இவ்வேளையில் குறுக்கிட்ட சபாநாயகர் அதிகாரிகள் மீது இங்கு குற்றம் சுமத்த முடியாது. அவர்களுடைய விளக்கங்களை இங்கு அவர்கள் தெரிவிக்கமுடியாது என்றார் திரு. ஜெயவர்த்தன தொடர்ந்துபேசுகையில சபாநாயகருக்கு முன்னரே சபைக்கு வந்தவன்நான் எனக்கு பாராளுமன்ற சிறப்புரிமைகள் பற்றித் தெரியும் என்றார்.

இதற்குப்பதிலளித்த கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ தாம் அவருக்கு இரும்புக் குளிசை கொடுப்பதாக் கூறினார்.

(ம-கு)

## துப்பாக்கி கொள்ளை

(வவனியா)

வவனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (தமிழ்ப் பகுதி) தலைமை அலுவலகத்தினுள் இரும்புக்கம்பியுடன் பிரவேசித்த இனம்தெரியாத இரு நபர்கள், அங்கிருந்த இரு லிகிதர்களைப் பயமுறுத்தி துப்பாக்கியொன்றை கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

இத்தலைமை அலுவலகத்தில் உள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவரின் அறையில் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்றையே இவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர்.

மரண அறிவித்தல்
உரும்பராய் சி. சுப்பிரமணியம்

உரும்பராய் சி. சுப்பிரமணியம் காலமானார். இவர் பலாலி சாதனா பாடசாலை அதிபரும், உரும்பராய் இந்துக்கல்லூரியாசிரியை தவமணியின் அன்புக் கணவரும், அமெரிகன் லொயிட்ஸ் கணக்குப் பரிசோதகர் குகதாஸ், மோகனதாஸ் (பொறியியலாளர் இங்கிலாந்து, திருமதி. நாகப்பிரபா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருகோணமலை நிலஅளவையாளர் கமலசேகரம், அமிர்தகௌரி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சுதா, சோபனா ஆகியோரின் பேரனுமாவர். இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை உரும்பராய் பிரமஹாலில் நடைபெறும்.
7617

மரண அறிவித்தல்
திருமதி தெய்வானைப்பிள்ளை சங்கரலிங்கம்

உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரலிங்கத்தின் அருமை மனைவி தெய்வானைப்பிள்ளை சிவபதமடைந்து விட்டார். அன்னார் உரும்பராய் கந்தையாப் பத்தர், சதாசிவம், காலஞ்சென்ற நல்லரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற தாமோதரப்பிள்ளை, சரஸ்வதி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (13-12-80) மாலை நான்கு மணியளவில் உரும்பராய் வேம்பன் மயானத்தில் நடை பெறும்.
7618

விற்பனையாகிறது!
தொழில் முறை இரசாயனம்
ஆசிரியர்: ?. நாகரெட்னம் B. Sc. Ceylon
கணித விஞ்ஞான தரவுகள்
ஆசிரியர்: ?. நடேசபிள்ளை B. Sc. (Ceylon)
மற்றும்
★ பாடசாலைப் புத்தகங்கள்
★ அப்பியாசக் கொப்பி வகைகள்
★ கணித உபகரணங்கள்
★ நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள்
★ 1981-ம் ஆண்டுக்குரிய கலண்டர்கள், டயறி வகைகள்
குறைந்த விலையில் கிடைக்கும்
மக்மிலன் புத்தகசாலை,
673, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
சாரதா ஸ்ரோஸ் & புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
வியாபாரிகட்கு விசேட கழிவு வழங்கப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General Post Office Sri Lanka under No: GE 8948/78. The Eelanaadu P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.